Government of **Western Australia**
**School Curriculum and Standards Authority**

# SAMPLE ASSESSMENT TASKS

## TAMIL: BACKGROUND LANGUAGE

## ATAR YEAR 11

## Acknowledgement of Country

Kaya. The School Curriculum and Standards Authority (the Authority) acknowledges that our offices are on Whadjuk Noongar boodjar and that we deliver our services on the country of many traditional custodians and language groups throughout Western Australia. The Authority acknowledges the traditional custodians throughout Western Australia and their continuing connection to land, waters and community. We offer our respect to Elders past and present.

**Copyright**

© School Curriculum and Standards Authority, 2023

This document – apart from any third-party copyright material contained in it – may be freely copied, or communicated on an intranet, for non-commercial purposes in educational institutions, provided that the School Curriculum and Standards Authority (the Authority) is acknowledged as the copyright owner, and that the Authority's moral rights are not infringed.

Copying or communication for any other purpose can be done only within the terms of the *Copyright Act 1968* or with prior written permission of the Authority. Copying or communication of any third-party copyright material can be done only within the terms of the *Copyright Act 1968* or with permission of the copyright owners.

Any content in this document that has been derived from the Australian Curriculum may be used under the terms of the Creative Commons Attribution 4.0 International licence.

**Disclaimer**

Any resources such as texts, websites and so on that may be referred to in this document are provided as examples of resources that teachers can use to support their learning programs. Their inclusion does not imply that they are mandatory or that they are the only resources relevant to the course. Teachers must exercise their professional judgement as to the appropriateness of any they may wish to use.

# Sample Assessment Task

# Tamil: Background Language — ATAR Year 11

## Task 2 — Unit 1

**Assessment type:** Responding to texts

**Conditions**

Time for the task: Part A – 30 minutes
Part B – 50 minutes

Other items: Monolingual and/or bilingual printed dictionaries permitted

**Task weighting:** 15% of the school mark for this pair of units

---

**Task 2: Traditions and values in a contemporary society** **(61 marks)**

This task comprises two parts

Part A: Listening and responding (29 marks)

Part B: Reading and responding (32 marks)

**Part A: Listening and responding** **(29 marks)**

Listen to two spoken texts in Tamil, based on the topic of Traditions and values in a contemporary society.

Both texts will be played twice, with a pause between the first and second readings. After the second reading of each text, there will be 15 minutes to answer the questions for each text.

You may take notes or answer questions at any time once the audio has started. Answer the questions in Tamil or English, as specified, with the relevant information from the text.

**Text 1: தமிழர்களின் உணவின் மகத்துவம்**

Listen to the speech and answer questions 1–5 in Tamil.

**Question 1** **(2 marks)**

"உணவே மருந்து" என்ற கொள்கையிலுள்ள நடைமுறை என்ன?

Explain the practice behind the principle 'food is the medicine'.

______________________________________________________________________________

______________________________________________________________________________

**Question 2** **(3 marks)**

ஆதிகாலத்தில் தமிழர்கள் உட்கொண்டு வந்த உணவுகளினால் என்ன பயன்களைப் பெற்றனர்?

List the **three** benefits Tamil people got from the foods they consumed in ancient times.

One: __________________________________________________________________________

______________________________________________________________________________

Two: __________________________________________________________________________

______________________________________________________________________________

Three: ________________________________________________________________________

______________________________________________________________________________

**Question 3** **(3 marks)**

ஆதிகால தமிழர் உணவு முறைகளிலுள்ள சிறப்பம்சங்கள் எவை?

What are the characteristics of early Tamil food?

One: __________________________________________________________________________

______________________________________________________________________________

Two: __________________________________________________________________________

______________________________________________________________________________

Three: ________________________________________________________________________

______________________________________________________________________________

**Question 4** **(3 marks)**

மேலே தரப்பட்ட உரையிலிருந்து, உணவுகளில் வாசனைத்திரவியங்களைப் பயன்படுத்துவதற்கான **மூன்று** காரணங்களைத் தருக?

According to the text, what are the **three** reasons given for spices being used in foods?

One: ______________________________________________________________________________

______________________________________________________________________________

Two: ______________________________________________________________________________

______________________________________________________________________________

Three: ______________________________________________________________________________

______________________________________________________________________________

**Text 2: நேர்காணல் – கிராமிய, நகர வாழ்க்கை**

Listen to the interview on Marutham radio and answer the following question in English.

**Question 1** **(18 marks)**

மருதம் வானொலியின் நேர்காணலைக் கேளுங்கள். அந்த நேர்காணலில் உள்ள தகவல்களை உள்ளடக்கியதாக, கிராமப்புற மற்றும் நகர்ப்புற வாழ்க்கை முறையைப் பற்றிய பிரணவனின் ஒப்பீடுகளை ஏறத்தாழ 100 சொற்களில் ஆங்கிலத்தில் தகவற் சுருக்கமாக எழுதுக.

Drawing on the information in the text, write an informative summary of Pranavan’s comparison of rural and urban lifestyles in approximately 100 words in English.

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

______________________________________________________________________________

**Transcript of spoken texts**

**Text 1: தமிழர்களின் உணவின் மகத்துவம்**

தமிழர்கள் "உணவே மருந்து" அதாவது "நாம் உண்ணும் உணவே எமக்குச் சிறந்த மருந்தாகும்" என்ற கொள்கையை, ஆதிகாலத்திலிருந்து இன்று வரை பின்பற்றி வருகின்றனர். இவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சித்த மருத்துவத்திலும், எவை உனக்கு உணவாகிறதோ அவையே உனக்கு நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாகவும் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

ஆதிகாலத் தமிழர்கள் ஊட்டச்சத்து அதிகமுள்ள சிறுதானிய உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். இதனால் அவர்களால் கடுமையான வேலைகளைச் செய்யக் கூடியதாகவும், நீண்ட காலத்திற்கு நோய்நொடி எதுவுமின்றி வலுவாகவும் ஆரோக்கியமாகவும் வாழக் கூடியதாக இருந்தது.

தமிழர்களின் உணவு முறைகள் அவர்கள் வாழும் பிரதேசங்களின் இயல்பிற்கு ஏற்ப வேறுபட்டு இருந்தது. அவர்கள் தமது உணவுகளை உடனடியாக தயாரித்து சூடாக உண்டு வந்தனர். காலை உணவாக கஞ்சி, கூழ் போன்ற திரவ உணவுகளையும் மதிய உணவாக சத்துகள் நிறைந்த அரிசி, கீரை வகைகளையும் காரத்துடன் கூடிய காய்கறி, மாமிசம் போன்ற உணவுகளையும் உட்கொண்டு வந்தனர். இவர்களின் உணவுகளில் அதிக அளவிலான நார்ச்சத்து, புரதச்சத்து உள்ள உணவுகளும் மிகச்சிறிய அளவிலான மாச்சத்துள்ள உணவும் அடங்கியிருந்தது.

தமிழர் உணவுகளில் பயன் படுத்தப்படும் வாசனைத்திரவியங்கள் உணவின் சுவையையும் வாசனையையும் கூட்டுகின்றன. அத்துடன் இவை நல்ல நோய் எதிர்ப்பு சக்தியையும் பக்க விளைவுகளின்றி நோய்களைக் குணப்படுத்தவும் உதவுகின்றன.

**Text 2: நேர்காணல் – கிராமிய, நகர வாழ்க்கை**

நிருபர்: வணக்கம் பிரணவன்!

பிரணவன்: வணக்கம் ஐயா!

நிருபர்: மருதம் வானொலி சார்பாக உங்கள் உயர் கல்விக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துகள்!

பிரணவன்: நன்றி ஐயா!

நிருபர்: உங்கள் பல்கலைக்கழகக் கல்விக்காக கிராமிய வாழ்க்கையை விட்டு அண்மையில் நகர வாழ்க்கைக்கு வந்துள்ளீர்கள். உங்கள் வாழ்க்கை மாற்றத்தைப் பற்றி மனதில் எவ்வாறான உணர்வு தோன்றுகிறது?

பிரணவன்: மிகுந்த மகிழ்ச்சி ஒரு புறமும் கவலை மறுபுறமுமாகவும் இருக்கிறது.

நிருபர்: ஆமாம், நீங்கள் இவ்வளவு காலமும் வாழ்ந்து வந்த கிராமிய வாழ்க்கையை விட்டு இங்கு வந்தது மிகுந்த கவலையாக இருக்கும்தான். கிராமிய வாழ்க்கையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

பிரணவன்: எனக்கு எப்போதுமே அந்த வாழ்க்கை மீது ஒரு ஈர்ப்பும் மரியாதையும் உண்டு. அங்கு இயற்கையோடு இணைந்த வாழ்க்கை, பரந்து விரிந்த சூழலுடன் கூடிய பெரிய வீடுகள், சுத்தமான காற்றோட்டம், எளிமையான ஆறுதலான ஆனந்தமான வாழ்க்கையாக இருக்கும். அங்கு உறவினர்களுடனும் நண்பர்களுடனும் நீண்டநேரம் உரையாடலாம். எல்லோருடனும் இனிமையாகவும் அன்பாகவும் பழகலாம்.

நிருபர்: கேட்கவே இனிமையாக இருக்கிறது. தற்பொழுது நீங்கள் வாழும் நகர வாழ்க்கை எப்படியிருக்கிறது?

பிரணவன்: இங்கு தொழில் நுட்பம், மருத்துவம், போக்குவரத்து, மின்சார வசதிகள் உடனடியாக கிடைக்கின்றது. அதுமட்டுமன்றி 24 மணி நேரமும் திறந்திருக்கும் கடைத்தொகுதிகள், மேல்நாட்டு உணவுக்கடைகள் இங்கு ஏராளமாகவே இருக்கிறது. அத்துடன் இங்கு எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் பொழுதுபோக்கு வசதிகளும் உண்டு. இவ்வாறான வசதிகள் இருந்தும் இங்குள்ள வாழ்க்கை இயந்திர வாழ்க்கை போல பரபரப்பாக இருக்கிறது. மற்றவர்களுடன் உரையாட நேரமே கிடைப்பதில்லை. ஒரு சிறிய வட்டத்திற்குள்ளேயே சுற்றிச்சுற்றி வாழ்வது போல உணர்கிறேன். செலவும் அதிகமாக இருக்கிறது.

நிருபர்: கிராமிய வாழ்க்கையிலிருந்த எவற்றையெல்லாம் நீங்கள் இழந்துள்ளதாக நினைக்கிறீர்கள்?

பிரணவன்: உறவினர்கள், நண்பர்கள் சூழ கோலாகலமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் நடைபெறும் பாரம்பரிய சடங்குகள், விழாக்கள் மற்றும் தமிழர்களின் பாரம்பரிய கலைகள், விளையாட்டுகள் போன்றவற்றையும் நான் இழந்து விட்டேன் போல் உணர்கிறேன்.

நிருபர்: உண்மைதான் பிரணவன். எந்த வாழ்க்கை நல்லது என நீங்கள் நினைக்கிறீர்கள்?

பிரணவன்: இரு வாழ்க்கை முறைகளிலும் வசதி வாய்ப்புகளும் மகிழ்ச்சியான விடயங்களும் வேறுபட்டவை. எந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவைகளையும் விருப்பங்களையும் வைத்தே தீர்மானிக்க முடியும்.

நிருபர்: உங்களுடைய கருத்தை நான் வரவேற்கிறேன். ஒரு சிறிய இடைவேளையின் பின் மீண்டும் உரையாடுவோம்.

**Part B: Reading and responding** **(32 marks)**

Read the two texts in Tamil related to the topic Traditions and values in a contemporary society, and answer the questions in Tamil or English, depending on the requirements of the question.

A total of fifty minutes will be allocated for the completion of the questions.

### Text 3: தைத்திருநாள்

Read the poem *Thaiththirunaal* and answer the question that follows in Tamil.

தையும் இன்று பிறந்தது
வையமெல்லாம் மலர்ந்தது
உலகுக்கெலாம் உணவளிக்கும்
உழவன் மனம் நிறைந்தது

துள்ளி நாமும் எழுந்திடுவோம்
தூக்கம் தன்னை முடித்திடுவோம்
அள்ளி அள்ளி குளித்திடுவோம்
அழகு ஆடை உடுத்திடுவோம்

முற்றத்தில் நீர் தெளித்து
மாக்கோலம் போட்டிடுவோம்
கரும்புடனே கதிர் கொண்டு
தோரணங்கள் கட்டிடுவோம்

கதிரவனும் எழுமுன்னே - புதுக்
கதிர் கொண்டு பொங்கிடுவோம்
பொங்கும் பால் சரியும் போது
பட்டாசு வெடித்திடுவோம்

அகிலமெல்லாம் உயிர்கொடுக்கும்
ஆதவனை வணங்கிடுவோம்
நன்றியை நாம் உரைத்திடுவோம்
தமிழர் திருநாளைப் போற்றிடுவோம்

**Question 1** **(13 marks)**

மேலே தரப்பட்ட கவிதையிலுள்ள தகவல்களை வைத்து, தைப்பொங்கல் கொண்டாட்டத்தைப் பற்றி உங்கள் வகுப்பு நண்பருக்கு ஏறத்தாழ 100 சொற்களில் மின்னஞ்சல் ஒன்றை தமிழில் எழுதுங்கள்.

Drawing on information in the poem, write an informative email to your classmates about the celebration of Thai Pongal. Aim to write approximately 100 words in Tamil.

**Text 4: தாய்மொழியைக் கற்று பண்பாட்டைப் பாதுகாப்போம்!**

Read the conversation between Thulasi and her grandmother and answer the following questions in English.

துளசி: பாட்டி! நான் உயர்பள்ளியில் ஒரு பாடமாக மொழியைக் கற்பதற்காக எனக்கு விருப்பமான மொழி ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

பாட்டி: நல்ல விடயம் தானே! உனக்கு என்ன மொழியைக் கற்க விருப்பம் துளசி?

துளசி: எனது நண்பர்கள் என்ன மொழியைத் தெரிவு செய்கிறார்களோ அதையே நானும் தெரிவு செய்ய விரும்புகிறேன் பாட்டி, ஆனால் அப்பா தமிழ் மொழியை கற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்துகிறார்.

பாட்டி: துளசி! உனது உயர் பள்ளியில் தமிழ் மொழியைக் கற்க முடியுமா? அப்படியாயின் தமிழ் மொழியை தெரிவு செய்யுமாறுதான் நானும் உனக்கு அறிவுரை கூறுவேன்.

துளசி: தமிழ் மொழியைக் கற்றுக் கொள்வது மிகவும் கடினமானது. அதைக் கற்பதனால் என்ன பயன் பாட்டி? எனது நண்பர்களைப் போல சீன அல்லது இத்தாலி போன்ற மொழிகளைக் கற்றால் எனது எதிர்காலத்திற்கு பயனுள்ளதாக இருக்கும் பாட்டி!

பாட்டி: உனது தாய்மொழியைக் கற்றால் உனக்கு மிகச் சிறந்த பயன் கிடைக்கும். ஒருவருடைய அடையாளம் என்பது அவருடைய தாய்மொழியே. அந்த மொழியே ஒவ்வொருவரினதும் பண்பாடு, பழக்கவழக்கம் மற்றும் பாரம்பரியத்தின் உயிர்நாடியாக விளங்குகின்றது. ஒரு மொழியைப் பாதுகாக்க வேண்டுமானால் நாம் அதைப் பேசவும் எழுதவும் தெளிவாகக் கற்றுக் கொள்ளவும் வேண்டும். இல்லையெனில் அந்த மொழி அழிவதுடன் அந்த இனமும் விரைவில் அழிந்துவிடும்.

துளசி: ஆமாம் பாட்டி, எனக்கு தெளிவாக விளங்குகின்றது. ஆனால் எனது நண்பர்கள் என்ன முடிவு செய்வார்களோ தெரியவில்லையே பாட்டி.

பாட்டி: உனது நண்பர்கள் வெவ்வேறு தாய்மொழியை பேசுபவர்கள். உனது தாய்மொழி தமிழ். உனது இனத்தின் அடையாளமாகவும் பண்பாட்டின் சின்னமாகவும் தமிழ் மொழியே விளங்குகின்றது.

துளசி: இப்பொழுது உணர்ந்து விட்டேன் பாட்டி. தமிழ் மொழியையே நான் கற்கப் போகின்றேன். தமிழ் மொழியைக் கற்பதால் வேறு என்னென்ன பயன் கிடைக்கும் பாட்டி?

பாட்டி: தாய்மொழியைக் கற்கும் போது உனது சிந்தனைத்திறன், கற்பனைத்திறன் மற்றும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உனது பேச்சாற்றலும் எழுத்தாற்றலும் அதிகரிக்கும். இதனால் தமிழ்

மொழியில் நீ சிறந்த புலமை அடைய முடியும். இங்குள்ள தமிழ் மக்களுடனும், உனது தாய் நாட்டிலுள்ளவர்களுடனும் பேசும் போது, நீ கூற விரும்பும் கருத்துகளையும் உணர்வுகளையும், முழுமையாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்த முடியும்.

துளசி: அது மட்டுமில்லை பாட்டி! எனக்கு பல்கலைக்கழக உயர் கல்வியைத் தொடர்வதற்கும், தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கும் தமிழ் மொழியைக் கற்றல் உறுதுணையாக இருக்கும் அல்லவா ! எனது தாய் மொழியை அழிய விடாமல் பாதுகாப்பேன். பிறமொழிச் சொற்களைக் கலக்காமல் உலகின் தொன்மையான மொழியான தமிழை எழுதவும் பேசவும் தெளிவுறக் கற்றுக் கொள்வேன். எனது தமிழ் நண்பர்களுக்கும் தாய்மொழியின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறி, எனது மாநிலத்தில் தமிழ் மொழியை மென்மேலும் வளர்ச்சியடைய முன்னின்று முயற்சிகளை மேற்கொள்வேன் பாட்டி.

**Question 1** **(4 marks)**

துளசி தனது உயர்பள்ளியில் தமிழ் கற்க விரும்பாததற்கு கூறிப்பிட்ட **நான்கு** காரணங்கள் எவை?

List the **four** reasons Thulasi gives for not wanting to learn Tamil at her high school.

One: ______________________________________________________________

______________________________________________________________

Two: ______________________________________________________________

______________________________________________________________

Three: ______________________________________________________________

______________________________________________________________

Four: ______________________________________________________________

______________________________________________________________

**Question 2** **(4 marks)**

தாய் மொழியைக் கற்க வேண்டியதன் அவசியத்தை துளசியின் பாட்டி எவ்வாறு விளக்கிக் கூறினார்?

Recount the explanations Thulasi's grandmother gave about the importance of learning a mother tongue.

One: ______________________________

______________________________

Two: ______________________________

______________________________

Three: ______________________________

______________________________

Four: ______________________________

______________________________

**Question 3** **(7 marks)**

தாய் மொழியைக் கற்பதால் துளசிக்கு எவ்வாறான அனுகூலங்கள் கிடைக்கும் எனப் பாட்டி கூறினார்?

According to Thulasi's grandmother, how would Thulasi benefit by learning her mother tongue?

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

**Question 4** **(4 marks)**

பாட்டியுடன் உரையாடிய பின்னர் துளசி எவ்வாறான முடிவுகளை எடுத்தாள்?

Outline what Thulasi decides to do after her conversation with her grandmother.

One: ________________________________________________________________________________

______________________________________________________________________________________

Two: ________________________________________________________________________________

______________________________________________________________________________________

Three: ______________________________________________________________________________

______________________________________________________________________________________

Four: _______________________________________________________________________________

______________________________________________________________________________________

# Marking key for Sample Assessment Task 2 — Unit 1 Part A

**Text 1: தமிழர்களின் உணவின் மகத்துவம்**

**Question 1** **(2 marks)**

Explain the practice behind the principle 'food is the medicine'.

| Description | Marks |
|---|---|
| எவை உணவாகிறதோ, அவையே நோய்களைக் குணப்படுத்தும் மருந்தாகவும் இருக்கிறது. | 2 |
| **Total** | **/2** |

**Question 2** **(3 marks)**

List the **three** benefits Tamil people got from the foods they consumed in ancient times.

| Description | Marks |
|---|---|
| 1. அவர்களால் கடுமையான வேலைகளைச் செய்யக்கூடியதாக இருந்தது | 1 |
| 2. நீண்ட காலத்திற்கு நோயின்றி வாழ்ந்தனர் | 1 |
| 3. வலுவாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்ந்தனர் | 1 |
| **Total** | **/3** |

**Question 3** **(3 marks)**

What are the characteristics of early Tamil food?

| Description | Marks |
|---|---|
| 1. அவர்கள் வாழும் பிரதேசங்களுக்கு ஏற்ப வேறுபட்டு இருந்தது | 1 |
| 2. ஒவ்வொரு வேளைக்கும் வெவ்வேறு உணவுகளை உட்கொண்டனர் | 1 |
| 3. அதிகளவிலான நார்ச்சத்து, புரதச்சத்துள்ள உணவுகளை உட்கொண்டனர் | 1 |
| **Total** | **/3** |

**Question 4** **(3 marks)**

According to the text, what are the **three** reasons given for spices being used in foods?

| Description | Marks |
|---|---|
| 1. இவை உணவின் சுவையையும் வாசனையையும் அதிகரிக்கும் | 1 |
| 2. நோய் எதிப்புச் சக்தியைத் தரும் | 1 |
| 3. பக்க விளைவின்றி நோய்களைக் குணப்படுத்த உதவும் | 1 |
| **Total** | **/3** |

## Text 2: நேர்காணல் – கிராமிய, நகர வாழ்க்கை

**Question 1** **(18 marks)**

Drawing on the information in the text, write an informative summary of Pranavan's comparison of rural and urban lifestyles in approximately 100 words in English.

| Description | Marks |
|---|---|
| **Response to text** | |
| • Pranavan feels great joy on one hand and anxiety on the other. He always had a fascination and respect for rural life<br>**Rural life**<br>• life here is in harmony with nature, people can live in a big house with spacious surroundings, and breathe clean air<br>• life is simple, comfortable and blissful<br>• people are nice and kind to everyone and can have long conversations with relatives and friends<br>**Urban life**<br>• technology, medical, transport and electricity facilities are readily available<br>• Western foods and 24 hour shopping centres are in abundance<br>• there are also entertainment facilities suitable for all age groups<br>• on the other hand, urban life is as hectic as mechanical life<br>• it's hard to get time to socialise with others and Pranavan feels like he lives in a small circle<br>• the cost of living here is high<br>• in general, Pranavan feels as if he has lost the traditional rituals, festivals, traditional arts and sports of Tamil-speaking communities in village life<br>• finally he concludes that in both lifestyles the comfort opportunities and pleasures are different | 1–12 |
| **Subtotal** | **/12** |
| **Response in English** | |
| Shows an excellent command of the English language. Uses a broad range of context relevant vocabulary, grammar and sentence structures, and stylistic techniques to engage the reader. | 3 |
| Shows a sound command of the English language. Uses a range of mostly context relevant vocabulary, grammar and sentence structures, and some stylistic techniques to engage the reader. | 2 |
| Shows a limited command of the English language. Uses some vocabulary that is relevant to the context and attempts to include some simple stylistic techniques | 1 |
| **Subtotal** | **/3** |
| **Text types, styles of writing and sequencing** | |
| Uses all the key conventions accurately for the audience, context, purpose, text type and style of writing. An informative summary includes:<br>• a title, an introduction, content and a conclusion<br>• clear, comprehensive and formal language<br>Content is very well organised and sequenced logically; for example, within and between paragraphs and throughout the writing | 3 |
| Uses the key conventions appropriately. Content is organised and sequenced logically; for example, within and between paragraphs and throughout the writing | 2 |
| Uses few of the key conventions appropriately for the audience, context, purpose and text type. Ideas are disjointed with little attempt to organise or sequence them. | 1 |
| **Subtotal** | **/3** |
| **Total** | **/18** |

**Text 3: கவிதை – தைத்திருநாள்**

**Question 1** **(13 marks)**

Drawing on information in the poem, write an informative email to your classmates about the celebration of Thai Pongal. Aim to write approximately **100** words in **Tamil**.

| Description | Marks |
|---|---|
| **Response to text** | |
| Writes an informative email in Tamil about the celebration of Thai Pongal, including the following information from the text:<br>• தைப்பொங்கல் பற்றிய அறிமுகம்<br>• உழவர்களின் உணர்வை வெளிப்படுத்தல்<br>• தைப்பொங்கல் அன்று அதிகாலையில் நாம் என்ன செய்வோம்<br>• கோலம் போடுதல், தோரணம் கட்டுதல் பற்றிய தகவல்<br>• புது அரிசி கொண்டு பொங்குதல், வெடி கொளுத்துதல் பற்றிய கருத்து<br>• சூரியனை வணங்கி நன்றி செலுத்துதல்<br>• தைப்பொங்கல் கொண்டாடுவதற்கான காரணத்தை முன் வைத்தல் | 1–7 |
| **Subtotal** | **/7** |
| **Linguistic resources (accuracy and range)** | |
| Uses a broad range of language, including vocabulary, grammar, synonyms and a variety of sentence structures appropriate to the context and purpose of writing | 3 |
| Uses a range of language, including vocabulary, grammar, synonyms and sentence structures mostly accurately | 2 |
| Uses a limited range of language, including vocabulary, grammar and sentence structures | 1 |
| **Subtotal** | **/3** |
| **Text type, styles of writing and sequencing** | |
| Uses all the key conventions accurately for the audience, context, purpose, text type and styles of writing. An email which includes:<br>• a salutation at the beginning and sign off at the end<br>• conveys information as clearly, comprehensively and as accurately as possible<br>• includes a range of adjectives, adverbs and facts, explanations<br>Content is very well organised and sequenced logically, within and between paragraphs and throughout | 3 |
| Uses most of the key conventions appropriately. Content is mostly organised and sequenced throughout | 2 |
| Uses few of the key conventions appropriately for the audience, context, purpose and text type. Ideas are disjointed with little attempt to organise or sequence them. | 1 |
| **Subtotal** | **/3** |
| **Total** | **/13** |

## Text 4: உரையாடல் – தாய்மொழியைக் கற்று பண்பாட்டைப் பாதுகாப்போம்!

**Question 1** **(4 marks)**

List the **four** reasons Thulasi gives for not wanting to learn Tamil at her high school.

| Description | Marks |
|---|---|
| 1. She wanted to choose the same language her friends chose | 1 |
| 2. She thought that learning Tamil was difficult | 1 |
| 3. She thought there was no benefit in learning Tamil | 1 |
| 4. She thought learning languages like Chinese or Italian would be useful for her future | 1 |
| **Total** | **/4** |

**Question 2** **(4 marks)**

Recount the explanations Thulasi's grandmother gave about the importance of learning a mother tongue.

| Description | Marks |
|---|---|
| 1. One's identity is one's mother tongue | 1 |
| 2. A mother tongue is the life vein of everyone's culture, customs and traditions | 1 |
| 3. To preserve a language, we must learn to speak and write it clearly | 1 |
| 4. If the language is not used, it will perish along with its race | 1 |
| **Total** | **/4** |

**Question 3** **(7 marks)**

According to Thulasi's grandmother, how would Thulasi benefit by learning her mother tongue?

| Description | Marks |
|---|---|
| 1. Learning her mother tongue will:<br>▪ increase her ability to think<br>▪ improve her imagination<br>▪ give her self-confidence<br>2. Her speaking and writing skills will improve<br>3. She can achieve great knowledge of the Tamil language<br>4. When she speaks to Tamil people:<br>▪ she can convey her ideas and feelings<br>▪ she can express her ideas fully and clearly | 1–7 |
| **Total** | **/7** |

**Question 4** **(4 marks)**

Outline what Thulasi decides to do after her conversation with her grandmother.

| Description | Marks |
|---|---|
| 1. Protect her mother tongue from extinction | 1 |
| 2. Learn to write and speak the Tamil language clearly without mixing in foreign language words | 1 |
| 3. Emphasise the importance of learning their mother tongue to her Tamil friends | 1 |
| 4. Make efforts to further develop the Tamil language in her state | 1 |
| **Total** | **/4** |

# Sample Assessment Task
## Tamil: Second Language — ATAR Year 11
### Task 3 — Unit 1

| | |
|---|---|
| **Assessment type:** | Oral communication |
| **Conditions** | |
| Time for the task: | Preparation time 2 lessons<br>Conversation 8–10 minutes |
| Other items: | Planning sheet |
| | Monolingual and/or bilingual printed dictionaries permitted during research and preparation time |
| **Task weighting:** | 12.5% of the school mark for this pair of units |

---

**Task 3: Our changing environment** **(18 marks)**

மாறிவரும் சூழல் என்ற தலைப்பில் உங்கள் கருத்துகளையும் அனுபவங்களையும் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ள ஒரு தமிழ் பேசும் நபருடன் ஒரு கலந்துரையாடலில் பங்கேற்கவும்.

Participate in a conversation with a Tamil speaker, who is interested in finding out your opinions and experiences on the topic of Our changing environment.

Before the conversation takes place, you will be given the opportunity to research, discuss and make notes on the topic.

**Notes for teachers**

Students will participate in a conversation with a Tamil speaker, who will ask a number of questions in Tamil on the prescribed topic, Our changing environment.

Below are some questions teachers may find helpful:

- வணக்கம். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? இன்று உங்களைச் சுற்றியுள்ள மாறுபடும் சூழலைப் பற்றி கலந்துரையாடுவோம்.
- அன்றாட வாழ்க்கையில் இயற்கைச் சூழலின் முக்கியத்துவம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
- நமது சுற்றுச் சூழலில் காற்று ஏன் மாசடைகின்றது?
- இயற்கைச் சூழலில் நீர் மாசடைவதற்கான காரணங்கள் என்ன?
- ஓசோன் படலம் எதனால் சிதைவடைகிறது?
- உலக வெப்பமயமாதல் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?உலக வெப்பமயமாதலால் எதிர்காலத்தில் நமது சமூகம் என்ன பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்?
- பயன்பாட்டைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல் மற்றும் மீள்சுழற்சி பற்றி உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கவும்?
- அண்மைக் காலத்தில் நெகிழிப்பைகளின் பயன்பாட்டைக் குறைக்க பல்வேறு நாடுகள் முயற்சி எடுத்து வருவது பற்றி உங்கள் கருத்து என்ன?
- இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுவது பற்றி உங்கள் கருத்து என்ன?
- இயற்கைச் சூழலை மாசடையாமல் தடுக்க இளைஞர்களாகிய நீங்கள் என்னென்ன வழிமுறைகளைக் கையாள வேண்டும்?
- உங்கள் மாநிலத்தில் மாறிவரும் சூழலைப் பாதுகாக்க எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கின்றார்கள்?
- உங்கள் ஆராய்ச்சியின் மூலம் நீங்கள் எதனைக் கற்றுக் கொண்டீர்கள்?

# Marking key for Sample Assessment Task 3 — Unit 1

| Description | Marks |
|---|---|
| **Content** | |
| Engages in a meaningful conversation. Comprehends all questions and provides a wide range of relevant information, ideas and opinions. Observes all conversational conventions, such as taking turns, using fillers and appropriate register | 4 |
| Engages in a conversation. Comprehends all questions and provides a satisfactory range of relevant information, ideas and opinions. Sometimes uses memorised text, but is able to incorporate it into the conversation. Observes most conversational conventions, such as taking turns, using fillers and appropriate register | 3 |
| Participates in a fragmented conversation. Comprehends most questions and provides some relevant information, ideas and opinions. Frequently uses memorised text and has difficulty incorporating it into the conversation. Observes some conversational conventions, such as taking turns, using fillers and appropriate register | 2 |
| Participates in a fragmented conversation. Comprehends anticipated and familiar questions and provides some information, ideas and opinions. Relies on memorised text. Observes few conversational conventions, such as taking turns, using fillers and appropriate registers | 1 |
| **Subtotal** | **/4** |
| **Linguistic resources – Accuracy and grammar** | |
| Applies the rules of grammar and syntax accurately and consistently. Makes minor errors in structures which do not affect meaning | 4 |
| Applies the rules of grammar and syntax mostly accurately and consistently. Makes errors in a range of structures which do not affect meaning | 3 |
| Applies the rules of grammar with a satisfactory level of accuracy and reasonable consistency. Makes errors which sometimes impede meaning | 2 |
| Applies the rules of grammar with little accuracy or consistency. Makes errors which impede meaning | 1 |
| **Subtotal** | **/4** |
| **Linguistic resources – Vocabulary and range** | |
| Uses contextually relevant vocabulary and a range of expressions, grammar and sentence structure | 4 |
| Uses relevant vocabulary and some expressions, grammar and sentence structure | 3 |
| Uses mostly relevant vocabulary, grammar and sentence structure | 2 |
| Uses basic and repetitive vocabulary, grammar and sentence structure | 1 |
| **Subtotal** | **/4** |
| **Speech – Pronunciation and intonation** | |
| Uses clear and comprehensible pronunciation and excellent intonation | 3 |
| Uses acceptable pronunciation and intonation | 2 |
| Uses unclear or inaccurate pronunciation and intonation at times | 1 |
| **Subtotal** | **/3** |

| Description | Marks |
| --- | --- |
| **Speech – Flow** | |
| Speaks confidently and naturally. Uses appropriate fillers where thinking time is required | 3 |
| Speaks with some confidence, although hesitates at times | 2 |
| Speaks with hesitation and/or repetition | 1 |
| **Subtotal** | **/3** |
| **Total** | **/18** |

# Sample Assessment Task

## Tamil: Background Language — ATAR Year 11

### Task 5 — Unit 2

**Assessment type:** Written communication

**Conditions**

Time for the task: 50 minutes

Other items: Monolingual and/or bilingual printed dictionaries permitted

**Task weighting:** 7.5% of the school mark for this pair of units

---

**Task 5: Pressures in today's society** **(15 marks)**

அவுஸ்திரேலியாவில்/ஆஸ்திரேலியாவில் (in Australia) பாலின சமத்துவம் மதிக்கப்படுகிறது மற்றும் ஊக்குவிக்கப்படுகிறது, இதற்கு ஒருவரால் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்க முடியும் என விளக்கி, உங்கள் பாடசாலை சஞ்சிகைக்கு தகவல் தரும் கட்டுரை ஒன்றை ஏறத்தாழ 250 சொற்களில் தமிழில் எழுதுக.

Write an informative article for your school magazine in which you discuss how an individual can contribute to gender equality being respected and encouraged in Australia. Write approximately 250 words in Tamil.

# Marking key for Sample Assessment Task 5 — Unit 2

| Description | Marks |
|---|---|
| **Topic – Content and relevance of response** | |
| Produces sophisticated informative writing, showing some synthesis of ideas, relevance and originality, and depth of content. Elaborates on topic, justifying viewpoint through structured logical arguments | 4 |
| Produces coherent informative writing, showing some synthesis of ideas, relevance and originality, and depth of content. Elaborates on topic, justifying viewpoint through structured logical arguments | 3 |
| Produces informative writing, showing, partial synthesis of ideas, relevance and depth of content. Discusses topic, justifying viewpoint through some logical arguments | 2 |
| Produces informative writing which summarises ideas, showing relevance and some depth of content. Discusses topic showing some ability to support viewpoints | 1 |
| **Subtotal** | **/4** |
| **Linguistic resources – Accuracy and grammar** | |
| Applies the rules of grammar and syntax accurately and consistently. Uses a range of complex structures with minor errors occasionally, but inaccuracies do not affect meaning or flow | 4 |
| Applies the rules of grammar and syntax mostly accurately and consistently. Uses a range of complex structures with some errors, but inaccuracies do not affect meaning or flow | 3 |
| Applies the rules of grammar and syntax with a satisfactory level of accuracy and reasonable consistency. Uses simple structures with errors and inaccuracies affecting meaning. Relies on syntax of another language | 2 |
| Applies the rules of grammar with little accuracy or consistency. Makes errors which impede meaning. Relies heavily on syntax of another language | 1 |
| **Subtotal** | **/4** |
| **Linguistic resources – Vocabulary and range** | |
| Uses contextually relevant vocabulary related to communication and a wide range of expressions. Uses a wide range of grammar (synonyms, phrases) | 4 |
| Uses contextually relevant vocabulary and a range of expressions. Uses a good range of grammar | 3 |
| Uses adequate vocabulary and a range of expressions. Uses some range of grammar | 2 |
| Uses repetitive, basic vocabulary. Relies on cognates. Uses a limited range of grammar | 1 |
| **Subtotal** | **/4** |

| Description | Marks |
|---|---|
| **Text types, styles of writing and sequencing** | |
| Uses all the key conventions accurately for the context, audience, purpose, text type and style of writing for an article, including:<br>• a title and end with a statement of conclusion or advice to the reader, use of formal and informative language<br>• ideas and opinions are developed, convey information as clearly, comprehensively and accurately as possible<br>• includes a range of adjectives, adverbs, facts, examples, explanations, analogies and quotations and provides references as evidence<br>Content is very well organised and sequenced logically, within and between paragraphs and throughout | 3 |
| Uses most of the key conventions appropriately. Content is mostly organised and sequenced logically throughout | 2 |
| Uses some key conventions and content is organised and sequenced to some extent | 1 |
| **Subtotal** | **/3** |
| **Total** | **/15** |